## COVID 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் - 2020

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம

COVID 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின்வச தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 29 ஆந் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அரசியலமைப்புச் சட்டத்தின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் அங்கீகரிக்கப்படும் பாதீட்டுக்கு புறம்பாக வருமானத்தை சேகரித்தல் மற்றும் செலவினம் மேற்கொள்ளல் அங்கீகரிக்கப்படாத போதிலும், பாராளுமன்றத்தின் | நிதித்தினை தாபிக்குமத் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தமை யால் 2020 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. குறித்த | பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகாரமின்றி 2020 ஏப்ரல் 16 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த நிதியத்திற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அத்திகதி முதல் ஒரு வருட காலப்பகுதியினுள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாராளுமன்ற அங்கீகாரமானது கணக்காய்வுத் திகதியான 2021 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையிலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 168(1) | வேறு ஏதேனும் முறையொன்றின் அடிப்படையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பத்தினை தவிர்த்து, ஏனைய சந்தர்ப்பங்களில் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் அரசிற்காக ஒரு தொகை பணம் கிடைக்கும் போது, அவரால் நி.பி. 169 இன் ஏற்பாடுகளுக்கமைய உரிய மாதிரிப் படிவத்தில் இயந்திரத்தில் அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டொன்று வழங்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் செப்தம்பர் மாதம் வரையிலும் ரூபா 114,073,730 கூட்டுத்தொகைக்கு உரியதாக பொது 172 மாதிரிப்படிவத்தின் பிரகாரம் வரையப்பட்ட 102 பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்வுத் திகதியான | கோவிட் - 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்த்திற்க்கு வழங்கப்பட்ட நன்கொடைகளில் ஒரு சிறிய பகுதியைத் தவிர அனைத்தும் நேரடியாக நிதியத்தின் அதிகாரப்பூர்வ வங்கிக் கணக்கே பங்கிப்பு செய்யப்பட்டுள்ளன. நன்கொடை மதிப்பின்படி ரூபா 10 முதல் சுமார் ரூபா 50 மில்லியன் வரையான வீச்சினை இந்த பங்களிப்புகள் கொண்டிருந்தன. இந்த நிலைமை காரணமாக தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களாக நன்கொடையாளர்களின் எண்ணிகையில் அதிகரித்துள்ளது.<br><br>நடைமுறையில் மிகவும் பொருத்தமான நடைமுறையொன்றாக ஜனாதிபதி அலுவலகத்திற்கு | நிதிப்பிரமாணத்தின் பிராகரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2021 யூலை 26 ஆந் திகி வரையிலும் குறித்த தொகையை வைப்புச் செய்த நிறுவனம் அல்லது நபர்களுக்கு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நேரடியாக மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகளுக்கு மேலதிகமாக அதிக மதிப்புள்ள நன்கொடைகளுக்கு பொது 172 விலைப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டதுடன், அவர்களின் முகவரிகள் மற்றும் அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அவர்களுக்கு பற்றுசீட்டுக்களை வழங்க தீர்மானிக்கப்பட்டது.<br><br>அதன்படி தற்போது ஆளடையாளத்தினை உறுதி செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான நன்கொடைகளுக்கு பற்றுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 185(1) | பணத்தை பொறுப்பேற்கும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கிடைக்கும் அனைத்து பணமும் காசுப் புத்தகம் மற்றும் அதற்குரிய ஏனைய புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், நேரடி வைப்புகளாக நாளொன்றில் கிடைக்கும் அனைத்து வைப்புகளினதும் கூட்டுத்தொகை மாத்திரம் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | ஒரே நாளில், ஏராளமான நன்கொடையாளர்கள் நிதியத்தின் அதிகாரப்பூர்வ வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புக்களாக நன்கொடையளித்திருந்தமையால், நன்கொடையாளர்களின் அடையாளங்களைக் கண்டறிய முடியாததால், இத்தகைய நேரடி நன்கொடைகள் மற்றும் அடையாளங்களை வெளியிட விரும்பாத நன்கொடையாளர்களின் நாளொன்றின் பெறுவனவுகளின் தொகுப்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பெயரில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு பெறுவனவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிராகரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அந்த பெறுவனவுகளின் கூட்டுத்தொகையின் விரிவான தகவல்கள் நிதியத்தின் வங்கிக் கணக்கு அறிக்கையில் உள்ள குறிப்புகளுடன் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். | |
| (iii) | நிதிப்பிரமாணம் 185(2) | பணத்தை பெற்றுக்கொள்ளும் போது காசுப் புத்தகத்தின் குறிப்புகளின் திகதிகளி மற்றும் பணத்தை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் வழங்கிய பற்றுச்சீட்டுகளின் திகதிகள் ஒத்திருக்க வேண்டும். காசுப் புத்தகத்தின் பிரகாரம் திகதி மற்றும் பற்றுச்சீட்டின் திகதி ஆகயவற்றுக்கிடையே வேறுபாடுகள் நிலவிய 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | குறிப்பிடப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்களிலும், காசுப் புத்தகத்தில் பதிவு செய்தல் வங்கி அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால், தரவுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போது பதிவுகள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றன. இருப்பினும், பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ள அனைத்து பெறுவனவுகளும் காசுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணத்தின் பிராகரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறுகள் ரூபா 1,672,798,912 ஆன மிகையாக காணப்பட்டதுடன், நிதியம் மீளாய்வாண்டில் தாபிக்கப்பட்டுள்ளமையால் அதனோடு ஒத்ததாக கடந்த வருடத்தின் செயற்பாட்டு பெறுபேறுகளுடன் ஒப்பிட முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 மே 15 அந் திகதிய முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நிதியத்திற்கு கிடைக்கும் நன்கொடைகளை வரியிலிருந்து விலக்களிப்பதற்காக நடவடிக்கை எடுக்க | பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்ததுடன் இணைந்ததாக நன்கொடைகளை வரியிலிருந்து விலக்களிப்பதற்கு இயலுமானதாக | முகாமைத்துவக் குழுவின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தீர்மானித்திருந்த போதிலும், 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிதியத்திற்கு கிடைக்கும் நன்கொடைகளை வரியிலிருந்து விலக்களிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இருக்கும். | |
| (ஆ) நிதியத்திலிருந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் PCR பரிசோதனைக் கூடத்திற்காக தேவையான அவசர கொள்வனவுகளுக்காக ரூபா 2.50 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் 80 சதவீதமான ரூபா 2.01 மில்லியனான செலவினம் மதிப்பீட்டுக்கு புறம்பான செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த செலவினங்களிடையே ரூபா 1.26 மில்லியன் PCR பரீட்சிப்பு உதவியாளர் ஒருவருக்கு கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | நிதியத்தினால் நிதி வழங்குவதற்கு முன் இந்த PCR ஆய்வகத்தை இயக்க வேண்டும் என்பதால், வேறு வழியில் பணத்தை முதலீடு செய்து முதற்கட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.<br><br>இதன் விளைவாக, கோவிட் 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட நிதியானது, ஆரம்ப மதிப்பீட்டிற்கு புறம்பாக காணப்பட்டாலும், PCR ஆய்வகம் தொடர்பான பிற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. | செலவின மதிப்பீடுகளை துல்லியமாக பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| Covid 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் பின்வரும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.<br><br>• மருந்துகள், மருந்து பரிசோதனை உபகரணங்கள் உட்பட சுகாதார வசதிகள் மேலும் Covid 19 தொற்றுநோயை எதிர்த்துப் | கோவிட் 19 சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் நோக்கங்களின் கீழ் நிதி வழங்கக்கூடிய திட்டங்களுக்கு முகாமைத்துவக் குழுவால் பெறப்பட்ட முன்மொழிவுகளை பரிசீலித்து நிதி விடுவிக்கப்படும். கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையில் பெரும்பாலான செயற்திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு | நிதியத்தின் பணத்தை உச்சமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

போராடும் திறனை அதிகரிக்க அவசர நிதி உதவியை வழங்குதல்.

- சுகாதார சேவைகள், சுகாதார சேவைப் பணியாளர்கள் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவை வழங்குநர்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கான செலவுகள்.
- குழந்தைகள், பெண்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள், முதியவர்கள், ஊனமுற்றோர் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்குதல்.
- கிராமப்புற மற்றும் தொலைதூர மருந்தகங்களுக்கு நிதி உதவி வழங்குவதன் மூலம் பொது சுகாதாரத் துறையை வலுப்படுத்துதல்.
- உள்ளூர் மூலப்பொருட்கள், வளங்கள், அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி சுகாதாரப் பொருட்களை உற்பத்தி செய்யவும், உற்பத்தி செய்யவும் மற்றும் விநியோகிக்கவும் உள்நாட்டு மருத்துவப் பிரிவுகளுக்கு உதவுதல்.
- உலக சந்தையில் உயர்தர பாதுகாப்பு ஆடை மற்றும் சுகாதார பொருட்களை வழங்க புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.

2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்தம் ரூபா 1,641.73 மில்லியன் நிதியின் மீதியானது, மேற்குறித்த உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டமையால், நிதியை ஈடுபடுத்த போதிய அளவிலான திட்ட முன்மொழிவுகள் முகாமைத்துவக் குழுவிற்கு பெறப்படவில்லை. இதன்படி, தொற்றுநோய் சூழ்நிலையில் நடத்தைக்கு ஏற்ப பணத்தை உடனடியாகப் பயன்படுத்துவது மற்றும் பணத்தை செயலற்ற நிலையில் வைத்திருத்தல் பொருத்தமானதல்ல என்பதைக் கண்டறிந்ததால், நிதியத்தின் நிதிச் சொத்துக்கள் 07 நாட்கள், 31 நாட்கள், 03 மாதங்கள், 06 மாதங்கள் மற்றும் 01 வருடங்கள் நிலையான வைப்புகளில் வைப்புச் செய்யப்பட்டன. இது நிதியத்தின் நிதி சொத்துக்களை அதிகரிக்க உதவியது.

நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாது வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 6.25 மில்லியன் மற்றும் நடைமுறைக் கணக்கில் ரூபா 111.06 மில்லியன் என பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், நிலையான வைப்புக்களில் ரூபா 1,524.42 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.